*Name of the NEWSPAPER:* **Daily Thanthi** *DATE:* **27th February, 2021**

*Name of the institution:* **Holy Cross College (Autonomous), Nagercoil**

# சூரிய மின் விளக்குகள் திறப்பு விழா

நாகர்கோவில், பிப்.27-

நாகர்கோவில் திருச்சிலுவை கல்லூரி சார்பில் தேசிய ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் நிதியுதவியுடன் பொழிக்கரை மற்றும் காட்டுவிளையில் சூரிய மின் விளக்குகள் அமைக்கப்பட்டது. இவற்றின் திறப்பு விழா நடந்தது.

பொழிக்கரையில் நடந்த நிகழ்ச்சியில் கூடுதல் கலெக்டர் மெர்சி ரம்யா, கல்லூரி செயலாளர் ஜெரார்டின் ஜெயம், முதல்வர் ஆனி பெர்பெட் சோபி, துணை முதல்வர் லீமா ரோஸ், திண்டுக்கல் காந்திகிராம் கிராமிய பல்கலைக்கழகம் உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் மண்டல ஒருங்கிணைப்பாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் சூரிய விளக்குகளை அர்ப்பணித்து வைத்தனர். பொழிக்கரை பங்குதந்தை ஞானசேகரன் வாழ்த்தி பேசினார். முன்னதாக கல்லூரியின் உன்னத் அபியான் திட்ட ஒருங்கிணைப்பாளர் பனிமய மெர்சி வரவேற்று பேசினார். முடிவில், பொழிக்கரை பஞ்சாயத்து தலைவி கெபின்ஷா நன்றி கூறினார். இதுபோல், காட்டுவிளையிலும் சூரிய மின் விளக்கு திறந்து வைக்கப்பட்டு அர்ப்பணிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிகளில் பேராசிரியர்கள் பிரபினா, பவானி, வினி மற்றும் மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

उन्नत भारत अभियान
UNNAT BHARAT ABHIYAN